

புகழ்

குறள் 236

**தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்கவேண்டும். இயலாதவர்கள் அந்தத் துறையில் ஈடுபடாமல் இருப்பதே நல்லது.

# இளையோர் உலகம்




### தூண்டில் மீன்

மீன்களுக்கு தூண்டில்போட்டு மனிதன் பிடித்துக்கொள்வான். ஆனால், மீன்களே மீன்களுக்கு தூண்டில் போடுவது குறித்து கேள்விப்பட்டதுண்டா..? தூண்டில் மீன் என்று பெயர் பெற்ற ஒரு வகை மீன் சமுத்திரத்தில் காணப்படும். இது மிகவும் தந்திரசாலி. இதன் வாயைச் சுற்றிலும் எப்போதும் அசைந்தபடியே இருக்கும் சிம்புகள் எனும் உணர்கொம்புகள் உண்டு. அவற்றை சிறு புழுக்கள் என்று நம்பி, வேறு சில சிறு மீன்கள் தின்பதற்காக அருகில் செல்லும்போது தூண்டில் மீன்களுக்கு அவை இரையாகி விடுகின்றன.

### உணவின்றி 60 நாள்

பென்குவின் முட்டைகளை ஆண் பறவைதான் அடை காக்கும். சுமார் 60 நாட்கள் வரை தந்தை பென்குவின் அடைகாத்து குஞ்சு பொரிக்கும். இந்த 60 நாட்களிலும் தந்தை பென்குவின் உணவு எதுவும் சாப்பிடுவதில்லை. இதனால்



கிட்டத்தட்ட 12 கிலோ வரை இவை எடை குறைந்து விடுகின்றன.

குஞ்சு பொரித்தப் பின் சில நாட்கள் வரை தன் தொண்டையில் சுரக்கும் ஒரு வித திரவத்தை தந்தை பென்குவின் பறவை தனது குஞ்சுகளுக்கு பால் போல கொடுக்கும். தாய் பறவை அதன் பிறகே குஞ்சைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும்.

### குட்டித் துறவிகள்

தாய்லாந்து நாட்டில் புத்தத் துறவிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. இன்றைய இளைஞர்கள் புத்த துறவிகளாவதற்கு அதிக ஆர்வம் காட்டாமல் இல்லற வாழ்க்கையில் ஈடுபடவே விரும்புகிறார்களாம். இதனால் எதிர்காலத்தில் புத்த துறவிகளுக்கு பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க என்ன செய்யலாம் என்று கருதிய தாய்லாந்து அரசாங்கம் சிறு வயதிலேயே புத்த மதத்தில் ஆர்வம் கொண்டி ருக்கும் சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை புத்த குருமார்களாக்குவதற்கு பயிற்சியை அளித்து வருகின்றது.

## குகைப் பிசாசு

மக்களிடையே விழிப்புணர்ச்சி இல்லாத அந்த பூதக்காடு கிராமம் மலையடிவாரத்தில் இருந்தது. அங்குள்ள மக்கள் மலைகளில் தேன், தினை, கேழ்வரகு எடுத்து வாழ்ந்து வந்தனர்.

யாரோ ஒரு காட்டுப்பெண், தேன் எடுக்கும்போது மலையில் இருந்து வழுக்கி கீழே விழுந்து இறந்துபோன சம்பவம் பூதக்காட்டைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. அப்போது தான் கேரளாவில் இருந்து பிழைக்க வந்த மலையாள மந்திரவாதி பேயாண்டி, அங்குள்ள மக்களைச் சந்தித்தார்.

ஊர்த் தலைவர் பூதநாதன், பேய் ஒன்று பயமுறுத்தி வருவதாகவும், நள்ளிரவில் அந்தப் பேயைப் பார்த்த ஒருவர் பயத்தால் செத்துவிட்டதாகவும் மந்திரவாதி பேயாண்டியிடம் சொன்னார்.

உற்சாகமான மந்திரவாதி உடுக்கையைத் தட்டியவாறு சொன்னார், "இது பொல்லாத குகைப் பிசாசு. இதை விரட்டவில்லை என்றால் ஊர் மக்களை அழித்துவிடும். பிசாசை விரட்டுவதற்கு எனக்கு ஐம்பதாயிரம் எனக்குக் கூலியாகத் தர முடியுமா?" என்று மிரட்டலாகக் கேட்டார் பேயாண்டி.

ஊர்த் தலைவர் பூதநாதனும் ஊர் மக்களைத் திரட்டி ஆலோசனைக் கேட்டுவிட்டு சம்மதம் தெரிவித்தார். அதன்படி முன் பணமாக இருபத்தைந்தாயிரத்தைப் பேயாண்டி வாங்கிக் கொண்டு வீட்டிற்கு சந்தோசமாய் வந்துவிட்டார். தன் மனைவியிடம் அதைப் பற்றிச் சொன்னார்.

அப்போது மந்திரவாதி கூறியதைக் கேட்ட ராமு, சோமு, மணிகண்டன், பிரேம்குமார் ஆகிய நான்கு சிறுவர்களும் மெதுவாக நழுவினர்.

அன்று செவ்வாய்க் கிழமை. நள்ளிரவில் ஊர் மக்களோடு பூதநாதனும் வந்திருந்தார். மந்திரவாதி உடுக்கையைப் பலமாகத் தட்டியவாறு பற்களைக் காட்டிப் பயங்கரமாகச் சிரித்தார்.

புல்லரிப்புடன் நின்று கொண்டிருந்த பூதநாதனை அருகில் கூப்பிட்டு குகையைக் காட்டினார். பூதநாதன் பார்த்துவிட்டு அலறிவிட்டார். "மந்திரவாதி ஐயா... பெண் முகமும் குரங்கு முகமுமாகத் தெரியுதே! இது என்ன பிசாசு?" என்றார்.

"இதுதான் குகைப்பிசாசு. இனிமேல் இந்தப் பிசாசை ஊருக்குள் வராதபடி விரட்டி அடிச்சுக்கிட்டிருக்கேன்" என்று கூறி ஒரு மண்டை ஓட்டை எடுத்து அதில் மையைத் தடவி ஏதேதோ மந்திரம் சொல்லி "ஓடிடு... ஓடிடு..." என்று கூற, சிறிது நேரத்தில் அந்த உருவம் மறைந்து விட்டது. ஊர் மக்களுக்கும் தலைவர் பூதநாதனுக்கும் பெரும் மகிழ்ச்சி. பேசிய பணத்தை அவரிடம் கொடுத்தனர். அவரும் பணத்தை வாங்கிக் கொண்டு வேகமாய் புறப்பட்டு விட்டார்.

விடிந்ததும் அந்த நான்கு சிறுவர்களின் பெற்றோர்களும் அவர்களைக் காணவில்லையென்று ஊர்த் தலைவரிடம் புகார் கூறினர்.

ஊர்த் தலைவரும் மந்திரவாதியை அணுகிக் கேட்டார். பிசாசு குகையை விட்டுப்போகும்போது தனியா போகிறோம்ங்கிற ஆதங்கத்துல சிறுவர்களைப் பிடித்துக் கொண்டு போயிருக்கும். அதை மீட்டுத் தரணுமுன்னா மறுபடியும் ஐம்பதாயிரம் ரூபாய் தரணும் என்றார். பணம் அவரிடம் கொடுக்கப்பட்டதும் சிறுவர்களை மீட்டுக்கொண்டு வருவதாகக் கூறிச் சென்றார்.

அப்போதுதான் அந்தச் சம்பவம் ஊரையே பரபரப்பாக்கியது. நான்கு சிறுவர்களும் அந்தக் குகையில் வசித்து வந்த மூதாட்டியுடன் ஊருக்குள் வந்தனர். அந்த மூதாட்டி, "எனக்கு கண் சரியாகத் தெரியாது. செவ்வாய்க் கிழமைதோறும் காட்டுக்காளியை வணங்க நான் கோவிலுக்குப் போவது வழக்கம். இந்த குரங்கை என் தோளில் சுமந்து செல்லுவேன். ஏன்னா இந்தக் குரங்கு எனக்குப் பாதையைக் காட்டும் திசையில் நடப்பேன். அதுக்காகத் தான் இந்தக் குரங்கோடு செல்லுவேன்.

மனுசங்க செய்யாத உபகாரத்தை இந்தக் குரங்கு எனக்கு விசுவாசமாய் செய்து உதவுதுங்க. இதைத்தான் குகைப்பிசாசுன்னு உங்க அறியாமையை வச்சுக்கிட்டு மந்திரவாதியும் உங்களை ஏமாத்திட்டார். இந்த சின்னப் பசங்க இதை உங்ககிட்ட சொல்ல இந்த ஊருக்குள்ளே அழைச்சுட்டு வந்தாங்க. அதனால சொல்லிவிட்டுப் போக வந்தேன்" என்றார்.

அவர் நடையைக் கட்ட, ஊரே ஏமாந்த முகமாய் மந்திரவாதியைத் தேடியது. அவர் ஓடிவிட்டார். நான்கு சிறுவர்களையும் ஊரே பாராட்டியது.

- தாழை மு.ஷேக்தாசன்

# உலகின் பிரமுகர்கள்

## தோமஸ் அல்வா எடிசன்

தோமஸ் அல்வா எடிசன்
*(பிறப்பு: 11.02.1847 - இறப்பு: 18.10.1931),*

மனித வாழ்வில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்திய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவர். அமெரிக்காவில் மிலன் என்ற இடத்தில் பிறந்த எடிசன், சவலைப் பிள்ளையாக வளர்ந்தார். மிக தாமதமாக பள்ளியில் சேர்ந்த எடிசன், 3 மாதங்கள் மட்டுமே பள்ளியில் படித்தார். பின்னர் பள்ளி ஆசிரியையாக இருந்த தாயிடம், வீட்டிலேயே கல்வி பயின்றார். மிக இளவயதிலேயே கேட்கும் திறனை இழந்த எடிசன், ரெலகிராஃப் (தந்திக் கருவி) அலுவலராக வேலைக்குச் சேர்ந்தார். மின்சாரம் தொடர்பான அடிப்படைகளை தெளிவாக விளங்கிக் கொள்ள, எடிசனுக்கு இந்த வேலை உதவியது. இதன் மூலமே பின்னாளில் அவர் ஒரு விஞ்ஞானியாக உருவானார்.

தொடக்கத்தில் தந்திப் பரிமாற்றம் தொடர்பான பல்வேறு புதிய கருவிகளை உருவாக்கிய எடிசனுக்கு, பெயரையும், புகழையும் தேடித் தந்தது 'ஃபோனாகிராஃப்' (1877). இசையைப் பதிவு செய்து கேட்க உதவும் கருவி இது.

பலர் நினைத்துக் கொண்டிருப்பது போல் மின்விளக்கைக் கண்டுபிடித்தவர் எடிசன் அல்ல. ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த மின்விளக்கின் வடிவமைப்புகளை எடுத்துக் கொண்டு, 'ஃபிலமெண்ட்' எனப்படும் மின் இழை மூலம் ஒளி தருமாறு மாற்றியமைத்தார். மின்விளக்கினுள் வெற்றிடத்தை உருவாக்கி, நீடித்து உழைக்கக் கூடிய மின்னிழைகளை பயன்படுத்தினார். சினிமா கமெராவுக்கான காப்புரிமை பெற்றிருந்த எடிசன் 'கைனட்டாஸ்கோப்' எனப்படும் சினிமாக் கருவியையும் உருவாக்கினார். அரங்குகளில் படங்களை திரையிட உதவும் 'விட்டாஸ்கோப்' கருவி எடிசன் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டதுதான். உலகின் முதல் மின்பகிர்மான முறையை உருவாக்கியவர் எடிசன். சொந்த செலவில் மின்உற்பத்தி நிலையம் அமைத்து, வாடிக்கையாளர்களுக்கு மின்சாரம் வழங்கினார் (1882). ஆராய்ச்சிக்காகவே தனது வாழ்வை அர்ப்பணித்த எடிசன் 84வது வயதில் காலமானார்.



## விடுகதை

### சென்ற இதழின் விடைகள்

| | |
|---|---|
| 01. வானம் | 06. தொட்டால் சிணுங்கி |
| 02. எதிரொலி | 07. சூரியன்- சந்திரன் |
| 03. தூக்கணாங் குருவிக்கூடு | 08. பனிக்கட்டி |
| 04. எறும்புக்கூட்டம் | 09. நதி |
| 05. மிளகாய்ப்பழம் | 10. மலை |

01. அனலில் பிறக்கும்? ஆகாயத்தில் பறக்கும். அது என்ன?
02. உமி போலப் பூ, சிமிழ் போல காய். அது என்ன?
03. ஊசி நுழையாத கிண்ணத்தில் ஒரு படி நீர். அது என்ன?
04. ஒரு புட்டிக்குள் இரண்டு தைலம். அது என்ன?
05. வாயிலே தோன்றி வாயாலே மறையும் பூ. அது என்ன?
06. சிவப்பு உறைக்குள் சில்லறை காசுகள். அது என்ன?
07. ஓடையில் ஓடாத நீர் ஒருவரும் அருந்தாத நீர். அது என்ன?
08. திரியில்லாத விளக்கு தினமும் எரியுது. அது என்ன?
09. எழுதி எழுதியே தேய்ஞ்சு போனான். அது என்ன?
10. சூடுபட்டுச் சிவந்தவன் வீடு கட்ட உதவுவான். அது என்ன?

*விடைகள் அடுத்த இதழில்...*